1995 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-11-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

56. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-6-1995 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

57. விவேகானந்தா ராக் மெமோரியல் மற்றும் விவேகானந்தா கேந்திரா ஆகியவைகள், சுவாமி விவேகானந்தா, ஸ்ரீராமகிருஷ்ணா மற்றும் திருமதி சாரதாதேவி ஆகியோரின் திருவுருவம் பதித்து வெளியிடும் தினசரி நாட்காட்டி, வாழ்த்து அட்டைகள் மற்றும் நாட்குறிப்பேடு ஆகியவைகளின் விற்பனைக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 19-7-1995 ஆம் நாளிட்ட 228 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

58. வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6-2-1992 ஆம் நாளிட்ட II(1)/வ.வ.ச.அ./25/92 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து அத்துறையின் 30-6-1995 ஆம் நாளிட்ட 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

59. பார்வையிழப்பைத் தடுத்தல் மற்றும் மறுவாழ்விற்காக இயங்கும், சென்னை, திருவாளர்கள் சத்யஜோதி சங்கத்தினரால் தயாரிக்கப்படும்

பொருட்களின் விற்பனைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 9-5-1995 ஆம் நாளிட்ட 121 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

60. பேராவூரணி, திருவாளர்கள் ஓட்டல் சங்கம் அவர்களால் 1977-78 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் - சமய அறக்கட்டளைகள் துறையின் 12-5-1995 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

61. தமிழ்நாட்டில் உபயோகத்திலுள்ள அல்லது உபயோகத்திற்காக வைக்கப்பட்டுள்ள பயணிகள் பேருந்துகளுக்கு 1984 மற்றும் 1986 ஆண்டுகளுக்காக செலுத்தப்பட வேண்டிய கால்/அரையாண்டு வரிக்காக கால அளவினை நீட்டிப்பது குறித்து உள் (போ-I) துறையின் 8-8-1995 ஆம் நாளிட்ட 1209 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. பெரியார் மாவட்டம், சிவகிரி அங்காடியின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதிக்குள் அமைந்துள்ள முத்தூர் கிராமத்தில் சில வேளாண்விளை பொருட்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு துணை அங்காடி ஒன்றை ஏற்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 5-6-1995 ஆம் நாளிட்ட 285 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. பெரியார் மாவட்டம், அவல்பூந்துறை அங்காடியின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதிக்குள் அமைந்துள்ள எலுமத்தூர் கிராமத்தில் சில

1995 நவம்பர் 9]

வேளாண்விளை பொருட்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு துணை அங்காடி ஒன்றை ஏற்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 31-5-1995 ஆம் நாளிட்ட 268 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1987 ஆம் ஆண்டு தமிழ் நாடு வேளாண்விளை பொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

27. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று அறுபத்தொன்பதாவது அறிக்கை, 1995-96.

28. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபதாவது அறிக்கை, 1995-96.

29. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபத்தொன்றாவது அறிக்கை, 1995-96.

30. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபத்திரெண்டாவது அறிக்கை, 1995-96.

31. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபத்தி மூன்றாவது அறிக்கை, 1995-96.

32. பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று எழுபத்தி நான்காவது அறிக்கை, 1995-96.

33. மனுக்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1995-96.

34. மனுக்கள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை, 1995-96.

35. மனுக்கள் குழுவின் நாற்பத்திரெண்டாவது அறிக்கை, 1995-96.